FOR SALE

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 25 திங்கட்கிழமை (09.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202




## கட்டுநாயக்க விமானத் தளத்தில் வெடிவிபத்து விமானப் பொறியியலாளர் மூவர் படுகாயம்

(கொழும்பு)

சர்வதேச விமான நிலையத்தில் உள்ள வான்படைத் தளத்தில் கிபீர் தாக்குதல் வானூர்திகளில் குண்டுகளைப் பொருத்தும் போது இடம்பெற்ற வெடிவிபத்தில் வான் படையைச் சேர்ந்த மூன்று பொறியியலாளர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இடம்பெற்றது. இக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கிபீர் விமானம் சேதமடைந்ததாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இதனை விமானப் படையின் பேச்சாளர் குறூப் (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தல்களை நடாத்த இராணுவம் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

கிழக்கில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடாத்தப்படுவதற்கு இராணுவம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. தேர்தலை நடாத்துவது தொடர்பாக மகிந்த அரசாங்கம் தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டுவருகின்றது.

ஆனால் கிழக்கின் தற்போதைய சூழ் நிலையில் தேர்தலை உடனே நடாத்துவது சாத்தியமற்றது என்று இராணுவத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். மேலும் கிழக்கில் தற்போது தேர்தல் நடாத்தினால் தங்களால் வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்று ஜனாதிபதிக்கு இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (06 ஆம் பக்கம் பார்க்க)



## ★ஆயுதங்கள் ★விமான எதிர்ப்புக் கருவிகள் ★போர்த் தளபாடங்களை வழங்கும் இலங்கை - இந்திய அரசுகளின் பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில்

## கைச்சாத்திட ஜனாதிபதி மகிந்த அங்கு செல்வார்

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்திற்கு முன்னர் மூன்று கட்டங்களாக இலங்கை விவகாரங்கள் குறித்து இந்திய அரசாங்கத் தரப்பிற்கு அறிவூட்டல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (06 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் மதப் பிரதிநிதிகள் குழு

### விரைவில் வன்னி செல்லும்

(மன்னார்)

தொடரும் மோதல் நிலைமையை முடிவுக்குக் கொண்டு வந்து அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தைக்குத் திரும்புவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு பௌத்த மற்றும் கத்தோலிக்க மதப் பிரதிநிதிகள் குழுவொன்று ஈடுபடவுள்ளது.

இம்முயற்சியில் கத்தோலிக்க ஆயர்களான மன்னார் (06 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயண சேவை இன்று இடம்பெறாது

யாழ்.மாவட்டத்திலிருந்து பிறமாவட்டங்களுக்குப் பிரயாணத்தினை மேற்கொள்வதற்கான காங்கேசன்துறை-திருகோணமலைக்கிடையிலான கப்பல் சேவை இன்று இடம் பெறாது என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

மேற்படி கப்பல் சேவை நாளை இடம் பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று பிரயாணத்தை மேற்கொள்வதற்குப் பிரயாண அனுமதிப் பத்திரத்தினை (Token) பெற்றவர்கள் நாளை தங்கள் பிரயாண ஏற்பாடுகளுடன் யாழ்.புகையிரத நிலையத்திற்குச் செல்லுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

மேலும் யாழ்.மாவட்ட செயலகத்தில் பிரயாண அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றவர்கள் அப் பத்திரத்தில் குறிக்கப்பட்ட திகதிக்கு அடுத்த நாள் தமது பிரயாணத்தை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ந-5)

## திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படை - கடற்புலி கடும் மோதல்

### சேதவிபரத்தில் வேறுபட்ட தகவல்

(திருகோணமலை)

திருகோணமலை புல்மோட்டைப் பகுதியில் புலிகளின் ஒரு படகை அழித்ததோடு மூன்று விடுதலைப்புலிகளையும் கொன்றிருப்பதாகவும் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடற்படையினருக்கும் விடுதல்லைப்புலிகளுக்குமிடையே நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் இடம்பெற்ற மோதல் சுமார் 3 மணி நேரம் நீடித்திருந்தது என அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கலம்பத்தை என்னும் இடத்தில் இடம்பெற்ற மோதலில் 2 விடுதலைப்புலி உறுப்பினர்கள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் சந்தையில் ஒருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சந்தையில் வைத்து நேற்றுக் காலை 7 மணியளவில் வியாபாரி ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் மானிப்பாய் நவாலி வடக்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான நாகராசா வேல்முருகன் (சுரேஷ் வயது-38) என்ற கோழி வியாபாரியே கொல்லப்பட்டவரென (06 ஆம் பக்கம் பார்க்க)

## சுய அதிகாரம் அளிக்கும் மாகாண கவுன்ஸில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்

### அமைச்சர் மகிந்த விஜயசேகர கருத்து

(கொழும்பு)

இலங்கையில் தமிழர் வாழும் பகுதியில் சுய அதிகாரமளிக்கும் மாகாண கவுன்ஸிலை அமைத்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் கருத்தரங்கில் பங்கேற்ற அவர் கூறுகையில்,

இலங்கையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக இனப்பிரச்சினை தீராத பிரச்சினையாகவுள்ளது. இப்பிரச்சினையைத் தீர்க்க தமிழர்கள் வாழும் பகுதியில் மாகாண கவுன்ஸில் ஏற்படுத்தி அவற்றுக்கு உரிய அதிகாரத்தை வழங்கி அதை நிர்வகிக்கும் பொறுப்பையும் தமிழர் களுக்கு அளித்தால் உரிய தீர்வு கிடைக்கும். இவ்வாறு அமைக்கப்படும் மாகாண கவுன்ஸில் 2 அல்லது 3 ஆண்டுக்ளுக்குச் செயற்படத்தக்க வகையில் திட்டமிட வேண்டும். இந்த மாகாண கவுன்ஸிலை மேற்பார்வையிடும் (06 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

பிரபல ஆசிரியர்

**வே.அன்பழகனின்**

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத் தாள் .

## பிரஸ்கரை வன்னிக்கு அனுப்பக் கூடாது பேச்சுக்கள் அரசை பலவீனப்படுத்தும்

### விமல் வீரவன்ச கருத்து

கொழும்பு)

அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு தேர்தலை நடாத்தினாலும் அதில் ஜே.வி.பி. போட்டியிடும். நாம் தற்போது உருவாக்கிக் கொண்டிருக்கும் புதிய தேசிய முன்னணி சார்பாக சந்தர்ப்பம் கிடைத்தால்நாங்கள் கிழக்கில் போட்டியிடுவோம் என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவரைஎந்தக் காரணம் கொண்டும் வன்னிக்கு அனுப்பக் கூடாது. சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது பாதுகாப்புப் படையினர் பெற்று வரும் வெற்றிகளை அகௌரவப்படுத்துவதாக அமைந்துவிடும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்துக் (06 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

மாதகலில் மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஏ.சி.கிருபா (வயது-36) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். குறித்த குடும்பஸ்தரின் சடலத்தை மரண விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் இளவாலைப் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர். (ந-5)

# விடுதலைப்புலிகளை யார் ஆதரித்தாலும் என் சொந்த துப்பாக்கியால் சுட்டுக்கொல்வேன்

## "த நேசன்" பத்திரிகைக்கு அமைச்சர் மேர்வின் சில்வா செவ்வி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை யார் ஆதரித்தாலும் என்னுடைய சொந்த துப்பாக்கியாலேயே சுட்டுக்கொலை செய்வேன் என்று அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஊடகமான 'த நேசன்' வார ஏட்டுக்கு அவர் அளித்த நேர்காணலில் 1989 ஆம் ஆண்டு ஜே.வி.பி.நடத்திய கலகத்தின்போது தனது குடும்பத்தினர் மூவர் படுகொலை செய்யப்பட்டனர்.

கடற்படையிலிருந்த என் இளைய சகோதரர், கர்ப்பிணி சகோதரி, அவரது கணவர் ஆகியோரை ஜே.வி.பிதான் படுகொலை செய்தது. அவர்களின் இரண்டு பிள்ளைகளும் அநாதைகளாக்கப்பட்டனர்.

அந்த கால கட்டத்தில் தெகிவளை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டார். என்மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அப்போது என் மகன் கல்லூரி விடுதியில் இருந்தான். இல்லையெனில் அவனும் தலையை இழந்திருப்பான்.

அப்படியான ஜே.வி.பிதான் என்னிடம் எத்தனை வாகனம் இருக்கிறது? என்ன வாடகை நான் செலுத்துகிறேன்? என்று கேள்வி எழுப்புகிறது. யாரை அவர்கள் இலக்குவைக்கிறார்கள்? மகிந்தவையா? பசிலையா? கோத்தபாயவையா? நான் கிராமத்தில் இருந்து வந்தவன். எனது கிராமத்தில் எனது தந்தை ஒரு வர்த்தகர். ஜே.வி.பிக்கு நான் முக்கியமில்லாமல் இருக்கலாம். ஆனால் என் குடும்பத்திற்கு நான் முக்கியமானவன். ஆகையால் என் வாகனங்களை விற்பனை செய்தது தொடர்பாக எதுவித தகவலும் தெரிவிக்கமுடியாது.

அதே நேரத்தில் நான் மேலதிகமாக 39 ஆயிரம் ரூபாய் வாடகை செலுத்தியிருப்பதாக ஒருவராவது நிரூபித்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக்கொள்வேன். அமைச்சரவை தகுதியுள்ள அமைச்சர்கள் அதிகமாக இருப்பதாகவும் கூடுதல் செலவாகிறது என்றும் ஜே.வி.பி.கூறுகிறது.

எனது வாகனம் பற்றி பேசுகின்ற ஜே.வி.பியினர் குறைந்த விலைக்கு டாடா வாகனத்தை வாங்காமல் மேர்சிடிஸ் வாங்குவது ஏன்? காந்தியும்,தாம்பாலவும் எளிமையாகத்தானே வாழ்ந்தார்கள்.

ஆனால் ஜே.வி.பி.போதிப்பதொன்று; செயற்படுவதொன்று. தமிழீழ விடுதலைப் புலிகளை யார் ஆதரித்தாலும் தனிப்பட்ட முறையில் நானே சுட்டுக்கொல்வேன் என்று சொன்னது உண்மைதான்.

சிங்கள,தமிழ்,முஸ்லிம் மற்றும் பேகர் மக்களுக்கானது இந்த நாடு. யாரும் ஆயுதம் தூக்கமுடியாது. யாரேனும் ஆயுதத்தை தூக்கினால் நாம் அதனை எதிர்ப்போம்.விடுதலைப்புலிகளை நேரடியாக ஆதரிக்கும் தமிழர்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அதேநேரத்தில் சிங்களவர்களுடன் இணைந்திருக்கும் தமிழர்களும் உள்ளனர்.

ஆனால் எவரேனும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்தால்; அமைதியை சீர்குலைத்தால்; நான் பொலிஸிடம் சென்று முறைப்பாடு செய்யமாட்டேன். நானே எனது சொந்த துப்பாக்கியால் அவர்களை சுட்டுக் கொலை செய்துவிடுவேன்.

இந்த சமூகத்திற்கு நன்மை செய்வதற்காக எதுவித அனுமதிப்பத்திரமும் பெறத் தேவையில்லை. நல்லதைச் செய்ய அச்சம் தேவையில்லை. துட்டகைமுனு தனது சிங்காசனத்திற்காக இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை-சிங்கள இனத்திற்காக -புத்த மதத்திற்காகத்தான் செய்தார்.

நாங்கள் துட்டகைமுனு மன்னனின் படைத் தலைவர்களாக இருந்த பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எனக்கும் முதுகெலும்பு உள்ளது. நான் அச்சப்படமாட்டேன். கொழும்பு கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்ட கஜநாயக்கவுக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இல்லை. என் இரத்த நாளங்களில் ஓடுவது என் பெற்றோரினதுதான். நான் எனது தாயின் பாலை குடித்து வளர்ந்தவன்.

ஆனால் கெட்ட இரத்தம் ஓடுகின்ற நபர்கள்தான் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். நான் அப்படிப்பட்டவன் அல்ல.

குடுலால் என்பவர் மாநகர சபை உறுப்பினர். இங்கிலாந்திலிருந்தபோது தேர்தலில் வெற்றி பெற்றவர். என் நண்பர்தான். 'குடு' வர்த்தகம் செய்திருந்தால் பொலிஸ் அவரை தண்டித்திருக்கும். அத்தகைய செயலை அவர் செய்தார் எனில் அவர் முகத்தில் காறி உமிழ்ந்து என் நட்பை அறுத்தெறிந்து விடுவேன்.

என் மகனைப் பொறுத்தவரையில் உல்லாசமாக இருக்க விரும்புகிறான். வாரம் ஒரு முறை இரவு நேர கேளிக்கை விடுதிகளுக்குச் செல்வான்.அப்படியான ஒரு நாளில்தான் பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டுவிட்டது. அரசாங்கம் எனக்குக் கொடுத்த மூன்று வாகனங்களை நான் விற்பனை செய்து விட்டேன்.

புதிய உயர் ரக வாகனங்களை வாங்கியிருக்கிறேன். வாகனம் மற்றும் நிலம் தொடர்பிலான வர்த்தகங்கள் மூலம் இவற்றைச் சம்பாதித்திருக்கிறேன். இன்னொருவருடன் உலங்கு வானூர்தியும் வாங்குவேன். ஏன் ஜெட் வானூர்தியும் வாங்குவேன். என் வாகனம். என் பெற்றோல். யார் ஏன் கவலைப்படவேண்டும்? என்னுடைய சொந்தப் பணத்தில் செலவு செய்கிறேன்.

நான் வரி செலுத்துகிறேன். வரி செலுத்தவில்லை என்று குற்றஞ் சாட்டினால் தண்டிக்கப்படுவேன். அப்படியான நிலையில் யாரைப் பற்றி ஏன் நான் கவலைப்படவேண்டும்? இன்னும் மூன்று அங்குலம் உயரமாக இருந்திருந்தால் விஜயகுமாரதுங்காவை விட அழகான நபராக நான் இருந்திருப்பேன். என்னுடைய மனைவியின் தந்தை சொந்தமாக குதிரை வைத்திருந்தார்.

என்னுடைய மனைவி தேவாலயத்திற்கு சாரட் வண்டியில் தான் செல்வார். என்னுடைய தந்தையின் சகோதரர் தான் என் கிராமத்திலே முதன் முதலில் வானொலி வாங்கியவர். அதற்காக அந்த கிராமமக்கள் எங்கள் மீது எரிச்சலடைய வில்லை.

களனிப் பிரதேசம் புத்தர் பார்வையிட்ட பகுதி. அப் பகுதியில் புத்தர் நீராடியிருக்கிறார். அங்கு மாட்டிறைச்சி விற்பனை செய்வதை அனுமதிக்கவே முடியாது. அதற்காகத்தான் முஸ்லிம் வர்த்தகரை நான் எச்சரித்தேன். தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எனது தொகுதியில் குடியேற நான் அனுமதி மறுக்கவில்லை.

ஆனால் உரிய அடையாளங்கள் நிரூபிக்கப்பட்ட பின்னர்தான் அவர்கள் குடியேற முடியும். என்னுடைய தொகுதியில் உள்ள அனைத்து சிறுபான்மை மக்களும் தங்களது அடையாள அட்டைகளை வைத்திருக்க வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டது நிரூபிக்கப்பட்டாலோ அல்லது பிரபாகரன் அதனை ஒப்புக் கொண்டாலோ இந்த அரசாங்கத்தை பிரபாகரனிடமே ஒப்படைத்து விடலாம்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தான் தீர்வுகாண முடியும். தமிழர்களோடு யுத்தம் நடத்த நாம் விரும்பவில்லை. சிங்கள-தமிழ் தலைவர்களால்தான் சுதந்திரம் பெறப்பட்டது. எமது நிபந்தனைகளுக்கு உட்பட்டால் பேச்சுக்களை நடாத்தலாம்.

சுயநிர்வாகம் என்பது நல்லதுதான். எங்களுடன் இணைந்து செயற்பட ஒப்புக்கொண்டால் பிரபாகரனுக்கு முதலமைச்சர் பதவியும் தர தயாராக உள்ளோம் என்றார் அவர். (ந-5)

# பாடசாலை மாணவர்களுக்கு இந்துருவலியில் உணவுப் பொருள்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத்திட்டத்தின் பயனாளிகளுக்கு விநியோகிப்பதற்கு இந்துருவலி கப் ல் மூலம் எடுத்துவரப்பட்ட 614.5 மெற்றிக் தொன் அரிசி,143.5 மெற்றிக் தொன் பருப்பு, 55 மெற்றிக் தொன் சீனி ஆகியன நலிவடைந்த குடும்பங்களிற்கான உணவு வழங்கலுக்கும், பாடசாலை மாணவர்களின் உணவு செயற்றிட்டத்திற்கும் வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

மேற்படி இரண்டு திட்டங்களுக்குரிய விநியோகத்திற்கான வழங்கற் கட்டளைகளை சகல பல நோ.கூ. சங்கங்களும் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத் திலிருந்து பெற்று உடனடியாக தமது கிளைகளுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்குமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களும் தமது வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு மேற் படி உணவுப் பொருட்கள் கிடைக்கப் பெறு வதை உறுதிப்படுத்துமாறும் எவ்வித தடங்கலுமின்றி மேற்படி கல்விக்கான உணவு சேர்த்திட்டத்தினை நடைமுறைப்படுத்துமாறும் அரச அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார். (ந-5)

# ஆட்கடத்தல்களை அம்பலப்படுத்திய ஐ.தே.க.உறுப்பினருக்கு கொலை அச்சுறுத்தல்

(கொழும்பு)

ஆட்கடத்தல் சம்பவங்களில் இராணுவ மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகளுக்குத் தொடர்பிருப்பதை ,அம்பலப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனிவிரட்னவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. எனக்குப் பல கொலை அச்சுறுத்தல்கள் வந்துள்ளன. ஆனால் அச்சப்படமாட்டேன் என்று லக்ஸ்மன் செனிவிரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யவில்லை. இந்த அச்சுறுத்தலின் பின்னால் அதிகாரம் படைத்த புள்ளிகள் இருப்பதை நான் அறிவேன் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு நகரில் நூற்றுக்கணக்கான சோதனைச் சாவடிகள் உள்ளன.

ஆனால் ஒரு சாவடியில் கூட கடத்தல்காரர்களின் வாகனங்கள் தடுக்கப்படவில்லை. அப்படியான நிலையில் அதிகாரம் படைத்த ஒரு சக்தி இத்தகைய கடத்தல்களின் பின்னணியில் இல்லை என்பது முட்டாள்தனமானது என்றும் லக்ஷ்மன் செனிவிரட்ன தெரிவித்தார். (ந-5)

# ரணிலிடம் 2 பில்லியன் ரூபாய் நட்டஈடு கோருகிறார் மகிந்த

(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2 பில்லியன் ரூபாய் நட்ட ஈடு கோரியுள்ளார்.

கேகாலையில் அண்மையில் நடைபெற்ற பேரணி ஒன்றில் மகிந்தவுக்கு எதிராக அவதூறு ஏற்படுத்தும் வகையில் பேசியதற்காக இந்த நட்ட ஈட்டுத் தொகையை கோரி ஜனாதிபதி மகிந்த மனு அனுப்பியுள்ளார்.

ரணிலின் பேச்சு லங்காதீப நாளேட்டில் பிரசுரிக்கப்பட்டமையால் அந்த நாளேட்டிடமிருந்தும் 2 பில்லியன் ரூபாய் நட்ட ஈடு தனியே கோரப்பட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷவின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

எனினும் இவற்றை உரிய முறையில் எதிர்கொள்ளவுள்ளதாக ரணிலின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (ந-5)

# பயண அனுமதியை முன்கூட்டியே பெறவும்

## யாழ்.அரச அதிபர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களிற்கு கடமையின் நிமிர்த்தம் செல்லும் அரச ஊழியர்கள் அனைவரும் பயண அனுமதியை நேரகாலத்துடன் பெற்று வைத்திருந்தால் பிரயாணத்தை மேற்கொள்வதில் ஏற்படும் வசதியீனங்களைத் தவிர்த்துக் கொள்ளலாமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

எனவே பயண அனுமதிய்ய நேரகாலத்துடன் பெற்றுக் கொண்டு சிரமங்களை தவிர்த்து பிரயாணத்தினை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

22.05.2007இல் மணநீக்கம்/673 இலக்க வழக்கின் வழக்காளி திரு.முத்துக்கிருஷ்ணபிள்ளை நாகேஸ்வரனால் நீதிமன்றின் அனுமதி இன்றி வலம்புரி பத்திரிகையின் விளம்பரப்பகுதிக்கு தவறான தகவலைக் கொடுத்து அது நீதிமன்றத் தீர்ப்பென நம்பச்செய்து பிரசுரிக்கப்பட்டது. இது நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, நீதிமன்ற பணிப்புரைக்கு அமைய குறித்த (மணநீக்கம்/673) வழக்கில் வழங்கப்பட்ட முற்றான தீர்வை, உண்மையை வெளிக்கொணர்வதற்காக கீழே பிரசுரிக்கப்படுகிறது. - ஆசிரியர்

## முற்றான தீர்வை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

முத்துக்கிருஷ்ணபிள்ளை நாகேஸ்வரன்,
இல.391, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

-வழக்காளி-

வழ.இல: மணநீக்கம்/673. எதிராக

01. முத்துக்கிருஷ்ணபிள்ளை நாகேஸ்வரன்
பெண் சிவனேஸ்வரி,
இல.68,விஜய் வீதி,
156-ம் கட்டை,
கண்டி வீதி, கிளிநொச்சி.

02. முத்துக்கிருஷ்ணபிள்ளை ஸ்ரீகுமரன்,
10/01, பெரியதம்பிரான் கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்-

இவ் வழக்கு 2007-ம் ஆண்டு மாசி மாதம் 21-ம் திகதி யாழ்ப் பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு.எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் அவர்கள் பிரசன்னமாயிருக்க இவ் வழக்கில் பதிந்த பின்னுறுதித்தீர்வையின் பிரதி 17.09.2006 -ம் திகதிய உதயன் பத்திரிகையில் மட்டும் 1-ம் எதிராளிக்கு எதிராக பிரசுரிக்கப்பட்டு மூன்று மாத காலம் முடிவடைந்தும் 1-ம் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் இவ் வழக்கில் பதிந்த பின்னுறுதித்தீர்வையை முற்றான தீர்வையாக்கும்படி மன்று கட்டளையிட்டுள்ளபடியால்,

இவ் வழக்கில் 2006-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ம் திகதிய பின்னுறுதித்தீர்வை இத்தால் முற்றான தீர்வையாக்கப்படுகிறது.

1-ம் எதிராளி இனிமேல் திருமணம் செய்யாத பெண்கள் அனுபவிக்கக்கூடிய சகல சுதந்திர உரிமைகளையும் அனுபவிக்கலாம் என்றும் விரும்பினால் தனது கன்னிப்பெயரை உபயோகிக்கலாம் என்றும் கட்டளையிடப்படுகின்றது.

2007-ம் ஆண்டு மாசி மாதம் 21-ம் திகதி.

வரைந்தது
வழக்காளியின் சட்டத்தரணி.

ஒப்பம்
மாவட்ட நீதிபதி,
யாழ்ப்பாணம்.

மேலே கொடுக்கப்பட்டவை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற வழக்கிலக்கம் மணநீக்கம்/673-ன் பின்னுறுதித்தீர்வையினதும், முற்றான தீர்வையினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதி என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(175)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் ④

பகுதி -II
நேரம் - 1 மணி 15 நிமிடம்

ஆக்கம்: வே.அன்பழகன்
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

01) இப் பந்தியை வாசித்து அதனைப் பயன்படுத்தி இலக்கம் 1 முதல் 10 வரையுள்ள வினாக் களுக்குரிய விடையை எழுதுக.

துள்ளித் துள்ளி வெள்ளை முயல் ஒன்று காட்டில் இருந்து வந்தது. அதன் சின்னஞ் சிறிய கண்கள் பார்ப்பதற்கு அழகானவை; காதுகள் நீண்டவை; மேனி மென்மையானது. அதற்குப் பசி மிக அதிகமாக இருந்தது. அங்குமிங்கும் உணவு தேடிப் பார்த்தது. பக்கத்திலுள்ள கொய்யா மரத்தில் பழுத்த பழமொன்று இருப்பதைக் கண்டது. முயலால் மரத்தில் ஏறவும்முடியாது பழத்தைப் பறிக்கவும் இயலாது. அதனால் மரத்தின் கிளையில் இருந்த கிளியின் உதவியினால் பழத்தைப் பெற்றது. பழத்தை மளமளவென்று உண்டது. கிளியும் முயலும் நகமும் சதையும் போல இணை பிரியாத நண்பர்கள் ஆகினர். முயல் மனம் மகிழ்ந்து நன்றி கூறிச் சென்றது.

1)முயல் எதைத் தேடிப் பார்த்தது?....................................................
2) காதுகள் என்பதன் ஒத்தகருத்தை எழுதுக?.........................................
3)சின்னஞ் சிறிய என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக..........................
4)'பழத்தை' என்பதன் பன்மைச் சொல் எழுதுக?......................................
5)பந்தியில் உள்ள இரட்டைக் கிளவி எது?..............................................
6)பந்தியில் உள்ள அடுக்கு மொழி எது?...............................................
7)பந்தியில் உள்ள உவமைத் தொடர் எது?.............................................
8)' வெள்ளை முயல் ஒன்று காட்டில் இருந்து வந்தது' இதில் உள்ள அடைமொழிச் சொல் யாது?.......................................................................
9) பந்தியிலுள்ள இணைமொழியை எழுதுக?..............................................
10) 'சென்றது' என்பதனை நிகழ்காலத்தில் எழுதுக?......................................

02) சொற்களை ஒழுங்காக்கி கருத்துள்ள வசனம் ஒன்றை அமைக்க

1.பறந்தன / பசிக்கு / தேடிப் /பறவைகள் /இரை
.......................................................................................
2.அசைந்து / காற்றின் /நாணற்புல் / வேகத்திற்கு /கொடுத்து / ஈடு
.......................................................................................

03) பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

1.கண் வளர்தல்.................................. 2. நாக்குப் புரளுதல்.......................................

04) பின்வருவனவற்றில் சரியாக எழுதப்பட்ட சொல்லினைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1.விளையாட்டு நிகள்ச்சி, விலையாட்டு நிகழ்ச்சி, விளையாட்டு நிகழ்ச்சி
.......................................................................................
2.பளமொலிகள் , பழமொலிகள், பழமொழிகள், பலமொலிகள்
.......................................................................................


05) ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குமான பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக

1.வீடு........................2. சகோதரன்...........................3.புதன்கிழமை........................

06) பின்வரும் வசனங்களுக்குரிய கருத்தினை தமிழில் எழுதுக

1.From where are you?..........................................
2.Please give me a pencil ?.......................................
3.May I read this book?..........................................

07) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் தமிழ்க் கருத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.





08) பின்வரும்

1.பின்வரும் தாவரப் பூக்களில் எத் தாவரத்தின் பூ மிகப் பெரியது

1.தொட்டாச்சிணுங்கி 2.அகத்தி 3.மல்லிகை 4.வெண்டி

2.




தரப்பட்ட பரிசோதனை அமைப்பிலே இந் நீரூடாக வரும் சூரிய ஒளிக்கற்றையை சுவரில் பட வைக்கும்போது எதனை அவதானிக்கலாம்?

1.மிகப் பெரிய சூரியனின் உருவம்
2.வெள்ளொளி நிறத்தினை
3.சூரிய ஒளியிலுள்ள பலவர்ண ஒளிக்கதிர்கள்
4.நீரிலுள்ள பலவர்ண ஒளிக்கதிர்கள்

3. 
குடும்பத் தேவைக்காக சந்தைக்குக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் பை ஒன்றை தயாரிக்கும் செயற்பாட்டில் தரம் 4 மாணவர்கள் ஈடுபட்டனர். இதில் பூவைத் தைப்பதற்கு சங்கிலித் தையலைப் பயன்படுத்தினர். பையினைத் தைக்கப் பயன்படும் தையல் வகை.

1.சங்கிலித்தலையல் 2.விஸ்பம் தையல்
3.மீன் முள்ளுத் தையல் 4.நரம்புத் தையல்

4.பயிரிடும் சாடியின் உள்ளே கீழ் உள்ள துவாரத்தின் மேல் முதலில் ஒரு படையை நிரப்பு தவற்கு பொருத்தமான ஊடகம்

1.மண்கலவை 2.உக்கிய இலைகள் 3.செங்கல் துண்டுகள் 4. உக்கிய சாணம்


5.கம்பியொன்றை இரு துண்டு ஆக்குவதற்கு பொருத்தமான உபகரணம் எது?

1. 2. 3. 4


6.பாடசாலை மாணவர்கள் இரு குழுக்களாக விளையாட ஆயத்தமாக இருக்கும் காட்சி கீழே காட்டப்படுகின்றது. இவர்கள் எந்த விளையாட்டை விளையாட ஆயத்தமாக இருக்கின்றார்கள்?




1.கரப்பந்தாட்டம்
2.எல்லே
3.காற்பந்து
4.துடுப்பாட்டம்

7. 
அருகே தரப்பட்ட உடுக்கோலத்தினை வானத்தில் எத்திசையில் அவதானிக்கலாம்?

1.கிழக்கு 2.மேற்கு 3.வடக்கு 4.தெற்கு

8. சிவப்பு வர்ணத்தையும் நீல வர்ணத்தையும் கலக்கும் போது தோன்றும் வர்ணம்.

1. பச்சை 2. மஞ்சள் 3. செம்மஞ்சள் 4. ஊதா


9.தேசப் படங்களில் நதியைக் காட்டப் பயன்படும் நியம நிறம்

1.கறுப்பு 2.சிவப்பு 3.பச்சை 4.நீலம்

10.நீருடன் நன்கு கலக்கக் கூடிய திரவம்

1.மண்ணெண்ணெய் 2.பெற்றோல் 3.வினாகிரி 4.தேங்காய் எண்ணெய்

11. தரப்பட்ட மின்குமிழ்களுள் ஒளிராத மின்குமிழ்




12. ஒத்த நிபந்தனைகளில் விரைவில் முளைக்கக் கூடிய வித்து ___

1. வெண்டி 2. கடுகு 3. பூசணி 4. தேங்காய்

13. தரப்பட்ட தாவரங்களுள் கவ்வாத்து செய்யப்படும் தாவரம்

1. பனை 2. தென்னை 3. தேயிலை 4. கமுகு

14.அருகே காணப்படும் கொண்ணிலைக்குரிய கட்டளை எது?



1. நிமிர்ந்து நில் 2. ஆயத்தம் செய்
3. குறிப்பிற்குச் செல் 4. இலகுவாய் நில்

15. 
இந்த உபகரணத்தைப் பயன்படுத்தும் தொழிலாளி

1.குயவன் 2.தச்சன் 3.மேசன் 4.மின்தொழிலாளி

09) பின்வரும் அடைப்பிற்குள் சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

ஏகாவேரி, பிரண்டை, பசளி, சிற்றரத்த, முடக்கத்தான்

அவற்றின் ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான பெயரைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



1(..................) 2(..................) 3(....................) 4(......................)

10) கீழே உள்ள அடைப்பிற்குள் அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

சிறுவர்கடவை, முன்னால் பாதசாரி கடவை, ஒலியெழுப்புத் தடை ,பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை, வசு வண்டித் தரிப்பிடம் , பாதசாரிகள் கடவை



1................. 2 ............... 3.................... 4......................
................. ............... .................... ......................

11) நான்கு ஆரம்பப் பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காணப்படுகிறது.

| பாடசாலை | மாணவர் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| வியஜ வித்தியாலயம் | 106 | 95 |
| அந்தோனியார் வித்தியாலயம் | 104 | 85 |
| சாகிரா வித்தியாலயம் | 108 | 105 |
| நாவலர் வித்தியாலயம் | 126 | 120 |

1. விஜய வித்தியாலய மாணவர்கள் மொத்த எண்ணிக்கை யாது?..........................
2. அந்தோனியார் வித்தியாலயத்தின் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது?...................
3.சாகிரா வித்தியாலயத்தின் ஆண் பிள்ளைகளை நான்கு இல்லங்களுக்குச் சமனாகப் பங் கிடப்பட்டால் ஓர் இல்லத்துக்குரிய ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?................
4.நாவலர் வித்தியாலயத்தின் ஒவ்வொரு பிள்ளைக்கும் 5 பென்சில்கள் இலவசமாக வழங் கப்பட்டன .ஆண் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பென்சில்களின் எண்ணிக்கை யாது?.....................................................
5.நான்கு பாடசாலைகளிலுமுள்ள பெண்பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?............

12) பின்வரும் வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக

1.ஒரு நோயாளிக்கு ஒரு தடவை 3 வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் மாத்திரைகள் எடுக்க வேண்டியிருந்தது எனின் நோயாளிக்கு 3 நாட்களுக்குத் தேவையான மாத்திரைகள் எத்தனை?..............................

2. 
இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக ................

3.சமனான நீளம் கொண்ட 8 கம்பித் துண்டுகளின் மொத்த நீளம் 6m ஆகும். ஒரு கம்பித்துண்டின் நீளம் யாது?............

4.இலங்கையின் சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் கீழுள்ள கோட்டுப்படத்தில் தரப்பட்டுள்ளன.

| | | | காலி |
|---|---|---|---|
| கொழும்பு | | | 115 |
| கண்டி | | 115 | 230 |
| யாழ்ப்பாணம் | 318 | 394 | 509 |

(தூரம் கிலோமீற்றரில்)


இதற்கு ஏற்ப எந்த இரண்டு நகரங்களுக்கிடையே மிகக் கூடிய தூரம் உள்ளது?.............

5.1 Kg பாசிப்பயறு ரூபா 80 ஆகும். 1 Kg 750 g பாசிப்பயறின் விலை யாது?..........................

6. 3/8, 1/4, 1/2 ஆகிய பின்ன எண்களுள் மிகப் பெரிய பின்ன எண் எது?............

7.சம நிறையுள்ள 4 சீனிப் பொதிகளின் மொத்த நிறை 19 Kg 200g ஆகும். ஒரு சீனிப் பொதியின் நிறை யாது?.................... Kg ..............................g

8. இவ் உருவின் சுற்றளவு யாது?..................................




9. நீர்த்தாங்கி ஒன்றிலிருந்து மு.ப 10.15 இற்கு நீர் விநியோகம் ஆரம் பமாகியது. 3 மணித்தியாலம் 45 நிமிடங்களுக்குப் பின்னர் நீர்விநியோ கம் நிறுத்தப்பட்டது. நீர் விநியோகம் செலுத்தப்பட்ட நேரம் யாது?..............

10.612 மாணவர்களை விளையாட்டுப் போட்டிக்கு 3 இல்லங்களுக்கு சம அளவுள்ள குழுக் களாக்கினால் ஒரு இல்லத்தில் இருக்கும் மாணவர்கள் எண்ணிக்கை யாது?................

13)பின்வரும் சம்பவத்தினை வாசிக்க

வீதியின் நடுவிலே வாழைப்பழத்தோல் ஒன்று கிடந்தது. அந்த வழியாகப் போகின்ற எவரும் அதனைக் கவனிக்கவில்லை. சிறுமி ஒருத்தி கவலையீனமாக ஆகாயத்தைப் பார்த்தபடி வந்தாள் ....... (என்னும் சம்பவத்தினைத் தொடர்ந்து 6 வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கிய மானது 4 சொற்களுக்குக் குறையாமல் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருக்க வேண்டும்.

1.......................................................2.......................................................
3.......................................................4.......................................................
5.......................................................6.......................................................

# இன்று ஒரு தகவல்

## அளவறிந்து உண்ணுங்கள்!

இந்த உலகத்திலே சாப்பிடாமல் கஷ்டப்படுகிறவர்களை விட, சாப்பிட்டு விட்டுக் கஷ்டப்படுகிறவர்கள் தான் அதிகம். அதாவது அதிகமாகச் சாப்பிட்டுவிட்டு அவஸ்தைப்படுகிறவர்கள்.

ஆயுர்வேதம் என்ன சொல்கிறது தெரியுமா? அளவறிந்து சாப்பிடுங்கள் என்று சொல்கிறது!

அப்படியானால், என்ன அர்த்தம்?

அந்த அளவு என்பது இரண்டு விஷயங்களைப் பொறுத்தது. ஒரு ஆகாரம் உங்கள் கண்முன்னாலே இருக்கிறது... உங்கள் கை அதை எடுப்பதற்காகப் போகிறது...

அதற்குமுன் அதாவது ஆகாரத்தை எடுப்பதற்கு முன்... இரண்டு விஷயங்களை நீங்கள் யோசிக்க வேண்டும். முதலிலே நமது ஜீரணசக்தி எவ்வளவு?... உண்ணும் ஆகாரத்தின் செரிக்கின்ற சக்தி எவ்வளவு?

நமது உடம்பின் ஜீரணசக்தி எப்படி என்பது நமக்குத்தான் நன்றாகத் தெரியும். அது இப்பொழுது சரியாக இருக்கிறது என்ற முடிவுக்கு வந்துவிட்டீர்களா?

சரி... அடுத்தது... இதோ எதிரிலே இருக்கிற ஆகாரம் எளிதானதா, கடினமானதா என்று முடிவு செய்ய வேண்டும் .அதாவது, இதைச் சாப்பிட்டால் இலேசில் ஜீரணமாகி விடுமா இல்லை சிரமப்பட்டுத்தான் ஜீரணமாகுமா என்பதை யோசிக்க வேண்டும்.

இலேசாகச் செரிக்கக் கூடிய ஆகாரம் எது, செரிப்பதற்குச் சிரமப்படுகிற ஆகாரம் எது என்பது நமக்குத் தெரியும்...

உதாரணத்துக்கு இனிப்புச் சுவையுள்ள உணவுப் பண்டங்கள்,நெய்யிலே சமைத்த உணவு வகைகள் முதலியவற்றை அரைவயிறுக்கு மேல் சாப்பிடக்கூடாது.

இலேசாகச் செரிக்கிற ஆகாரங்களை மனதுக்கு திருப்தி ஏற்படும் அளவுக்குச் சாப்பிடலாம். இதுதான் அதற்கு அளவு. ஜீரணத்துக்கு இலேசாக உள்ள பொருட்களை முறை தவறிச் சாப்பிட்டால் கூட அதிகமாக கெடுதல் எதுவும் ஏற்படாது.

ஆனால் கடினமான உணவு வகைகளை கண்டபடி சாப்பிட்டால் கஷ்டத்திலே கொண்டுவந்து விட்டுவிடும்! ஆனால் தினமும் உடற்பயிற்சி செய்கிறவர்கள்... இயல்பாகவே அதிக ஜீரணசக்தி உள்ளவர்கள் ஆகியோருக்கு இது கெடுதல் எதுவும் செய்யாது.

ஆகாரத்தை அதிகமாகச் சாப்பிட்டாலும் தப்பு... குறைவாகச் சாப்பிட்டாலும் தப்பு என்கிறது ஆயுர்வேதம் ! அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால்... உடம்பிலே வாயு, பித்தம், கபம் ஆகிய மூன்றையும் அது அதிகமாக்கி விடுமாம்! அதனாலே செரிமான சக்தி குறையும். பல நோய்கள் உண்டாகும்.

குறைவாகச் சாப்பிட்டால்... பலம், நிறம், வளர்ச்சி, மனம், அறிவு, புலன்கள் எல்லாம் பாதிக்கப்படுமாம். முக்கியமாக ஆகாரத்தை போதிய அளவுக்கும் குறைத்துச் சாப்பிட்டால் அது எண்பது வகையான வாத நோய்களுக்குக் காரணமாகுமென்று சொல்கிறது ஆயுர்வேதம்...

அதனால் நாம் சாப்பிடுகிற ஆகாரம் அதிகமாகவும் கூடாது; குறையவும் கூடாது. அதை எப்படி நாம் கண்டுபிடிப்பது?

அளவோடு சாப்பிடும் போது உடலின் செயற்பாடுகள் ஒழுங்காக இருக்கும். அதாவது நடப்பது, நிற்பது, உட்காருவது, தூங்குவது, மூச்சை உள்ளே இழுப்பது, வெளியே விடுவது, சிரிப்பது, பேசுவது எல்லாம் சுலபமாக இருக்கும்.

இதையெல்லாம் நாம் சுகமாக உணர்ந்தால் நாம் சாப்பிடும் உணவின் அளவு கூடவோ, குறையவோ இல்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

சாதாரணமாக சில வகையான ஆசாமிகளை நாம் தினமும் பார்க்கலாம். அவர்களுக்கு உட்காருவது ஒரு சாதனை... எழுந்திருப்பது அதைவிட பெரிய சாதனை... நடப்பது இன்னொரு சாதனை... சிரிப்பதற்குக் கூட உடம்பு சிரமப்படும்...

இவர்களெல்லாம் ஆகார விஷயத்திலே கவனமாக இருக்கவேண்டியது அவசியம் ! ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தேன். சார்... அருமையான சாப்பாடு... விலாப் புடைக்கச் சாப்பிட்டுவிட்டு வந்தேன் என்று பெருமையாகச் சிலபேர் சொல்வதுண்டு... அதெல்லாம் பெரிய தப்பு.

அப்படியெல்லாம் செய்யக்கூடாது. மூச்சு முட்ட சாப்பிட்டேன் என்று சிலர் சொல்வார்கள் அதுவும் தப்பு. சாப்பிடுவதனாலே நமது வயிற்றிலேயுள்ள செரிமான உறுப்புகள் கெட்டுவிடக்கூடாது.


அதனாலே கை சாப்பாட்டுக்குக் கிட்டப் போகும் போதெல்லாம் கவனமாக இருக்கவேண்டும். இவ்வளவும் ஆயுர்வேத மருத்துவம் சொல்கிற ஆலோசனைகள். நமது ஊரிலே ஒரு கல்யாணவிருந்து நடந்து கொண்டிருக்கிறது. பந்தியிலே உட்காந்து மும்முரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார் ஒருவர் !

உணவு பரிமாறிக் கொண்டு வந்தவர் "சார்... இதற்கு முந்திய பந்தியிலும் நீங்கள் சாப்பிட்டதை நான் பார்த்தேனே!" என்றார். அதற்கு இவர் "உங்களுக்கு ஞாபகசக்தி அதிகம்... எனக்கு ஜீரணசக்தி அதிகம்..." என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உலக அதிசயங்கள் ஏழு முதலாமிடத்தில் தாஜ்மகால்

7 புதிய உலக அதிசயங்களை தேர்வு செய் வதற்காக போர்த்துக்கல் நாட்டில் உள்ள அறக்கட்டளை ஒன்று உலகம் முழுவதும் ஓட்டெடுப்பு நடத்தியது. 2000ஆம் ஆண்டு தொடங்கி தொடர்ந்து டெலிபோன், இன்டர்நெட், எஸ்.எம்.எஸ். மூலம் ஓட்டு போட்டனர்.



இதன் மூலம் 21 இடங்கள் முதலில் தேர்வு செய்யப்பட்டன. அதில் இருந்து முதல் 10 இடங்களை தேர்வு செய்தனர். தாஜ்மகாலும் இதில் இடம்பெற்றிருந்தது.

அதிலிருந்து 7 இடங்களை தேர்வு செய்வதற்காக 6ஆம் திகதி நள்ளிரவு 12மணி வரை ஓட்டெடுப்பு நடந்தது. உலகம் முழுவதும் 10 கோடி பேர் ஓட்டுப் போட்டனர். நேற்று முன்தினம் ஓட்டு எண்ணிக்கை நடந்தது. நள்ளிரவு அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் அதிக ஓட்டுகள் பெற்று தாஜ்மகால் முதலிடத்தைப் பிடித்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட 7 அதிசயங்கள் வருமாறு,

தாஜ்மகால்–இந்தியா, சிஜன் இட்சா பிரமிடு– மெக்சிகோ, ரெடிமர் ஏசு சிலை –பிரேசில், சீனப் பெருஞ்சுவர், மெசுபிச்சு– பெரு, பெத்ரா –ஜோர்டான், ரோமன்கொலேசியம்.

லிஸ்பன் நகரில் கோலாகலமாக நடந்த விழாவில் இந்த அறிவிப்புகளை வெளியிட்டனர். இதில் இந்தியா சார்பில் நடிகை பிபாசாபாசு, காந்தி படநடிகர் பென் கிங்ஸ்லி, நில வில் முதலில் இறங்கிய ஆர்ம்ஸ்டிராங், பாப் பாடகி ஜெனீபர் லோபஸ், போர்த்துக்கல் கால்பந்து வீரர் கிறிஸ்டினா ரொனால்டோ உட்பட 12 பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.


உலக அதிசயம் தேர்வு செய்யப்பட்டதற்கான சன்றிதழ்களை அந்த நாட்டு தலைவர்களிடம் வழங்கினார்கள். தாஜ்மகால் தேர்வுசெய்யப்பட்டதற்கான சான்றிதழ்களை ஆக்ரா நகர மேயர் அன்ஜுலாசிங் பெற்றுக்கொண்டார்.

முதல் 10 இடங்களை தேர்வு செய்திருந்த போது தாஜ்மகால் 4–வது இடத்தில் இருந்தது. அப்போது மெக்சிகோ பிரமிடு முதலிடத்தில் இருந்தது. ஆனால் அதன்பிறகு இந்தியர்கள் ஆர்வத்தோடு ஓட்டு போட்டதால் அதிக ஓட்டுகளை பெற்று தாஜ்மகால் முதலிடத்தைப் பிடித்தது.

கடைசி நேரத்தில் உலக அதிசயப் பட்டியலில் தாஜ்மகால் இடம்பெறாமல் போய் விடுமோ என்ற அச்சம் இந்தியர்களிடம் ஏற்பட்டது. ஆனால் அதிக ஓட்டுபெற்று முதலிடத்தை பிடித்ததால் நாடு முழுவதும் மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது.

ஆக்ரா, டெல்லி மற்றும் வட மாநிலங்களில் மக்கள் பட்டாசுகளை வெடித்து தங்கள் மகிழ்ச்சிகளை வெளிப்படுத்தினார்கள். இதில் எகிப்து பிரமிடு நிரந்தர அதிசயமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே உலக அதிசயங்களில் இடம்பெற்றிருந்த ஈபிள்டவர், பைசா நகர சாயு கோபுரம் போன்றவை புதிய பட்டியலில் இடம்பெறவில்லை. (அ–5)





வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் (கண்ணகை அம்மன் ஆலயம்) ஆலய தேர்த் திருவிழாக் காட்சியையும், ஆலய பித்தர் கேணியில் தீர்த்தத் திருவிழாக் காட்சியையும் படங்களில் காணலாம்.

(படம்:– ஸ்ரீ. சஞ்ஜீவன்)

# இராசிபலன்

09.07.2007
(ஆனி 25, திங்கட்கிழமை)
நவமி காலை 06:09 மணிவரை
தசமி பின்னிரவு 03.43 மணிவரை
அச்சுவினி முற்பகல் 11.22 மணிவரை
இராகுகாலம் 07.28–08.58 மணிவரை
சுபநேரம் 11.58–01.28 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ஜனவசியம், சயனசுகம், மனமகிழ்ச்சி, நல்ல முயற்சி. |
| இடபம் | பிதாசிந்தை, கோபப்படுதல், சோம்பல் நிலை, காரிய அலைச்சல். |
| மிதுனம் | சயனசுகம், பெருமையடைதல், குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம். |
| கடகம் | சுபநிகழ்ச்சி, நல்ல செய்தி, போசனசுகம், இஷ்டசித்தி. |
| சிங்கம் | உத்தியோக பங்கம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, ஆன்றோர் சந்திப்பு. |
| கன்னி | வீண்தொல்லை, பொருள்விரயம், காரிய தாமதம், வாகனபயம். |
| துலாம் | சௌபாக்கியம், குடும்ப நன்மை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | சத்துரு ஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், மனமகிழ்ச்சி. |
| தனுசு | காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம், பூர்வ புண்ணிய கருமம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | சுபநிகழ்வு, வீண் கற்பனை, தொழிலில் ஆர்வம், முயற்சி தாமதம். |
| கும்பம் | கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, அன்னியர் சந்திப்பு, பணவருவாய். |
| மீனம் | போசன சுகக்குறைவு, பணவிரயம், குடும்பக்கவலை, வேலைச்சுமை. |

- வளவன்

# குற்றவியல் அவதூறுச் சட்ட மீள் நடைமுறை ஊடகவியலாளர்களுக்கு பாரிய அச்சுறுத்தல்

குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீள நடைமுறைப் படுத்த மஹிந்த ராஜபக்ஷ முயற்சிகள் மேற்கொள்வதனை கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் டுலிப்டி சிக்காஹெர எதிர்த்துள்ளார். இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது,

ஊடகங்களின் பணிகள் தொடர்பில் அரசாங்கம் கவலை கொள்ளுமாயின் ஊடக பிரதிநிதிகள் மற்றும் குடிமக்கள் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தலாம். அப்படியான ஒரு நிலையில் தான் மக்களும் ஊடகங்களும் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க முடியும்.

இத்தகைய சட்டங்களின் மூலம் ஜனநாயகம் மற்றும் விமர்சனக்குரலை அடக்கக்கூடாது. இத்தகைய சட்டமானது நாட்டை மீண்டும் குழப்பத்தில் தள்ளும் ஊடகவியலாளர்களுக்கு சந்தேகத்துக்குமிடமின்றி இச் சட்டம் ஒரு பாரிய அச்சுறுத்தல்தான். ஊடகங்களும் தங்களது பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என்றார் அவர். (அ–5)

# அரசை ஆதரிக்குமாறு கூட்டணிக்கு அச்சுறுத்தல்

## சந்திரகாந்த் சந்திரநேரு குற்றச்சாட்டு

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இணைய மறுப்பதால் பாரதூரமான எதிர்விளைவுகள் ஏற்படும் என்று அரசாங்கத்தினாலேயே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந் சந்திரநேரு கூறியதாவது,

அரசாங்கத்தை ஆதரிக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை மஹிந்த அரசாங்கம் நிர்ப்பந்திக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருவர்கூட அரசாங்கம் பக்கம் தாவப் போவது இல்லை. எப்போதும் எதிர்க்கட்சியாக இருப்போம். அரசாங்கத்தில் இணைய மறுத்தால் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்படும் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எச்சரிக்கை விடுத்துள்ளார். பல்வேறு அச்சுறுத்தல்கள் இருந்தமையால் அப்பகுதிகளில் நாம் இப்போது பணியாற்றவில்லை.

இதுதொடர்பில் அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் செயலகத்துக்கு முறைப்பாடும் அனுப்பினோம். அதனை கவனிப்பதாக பதிலும் வந்தது. ஆனால் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. நாங்கள் அரசாங்கத்தை ஆதரித்தால் உயிரைத் தியாகம் செய்த எமது கூட்டமைப்பின் உறுப்பினர்களை அவமதிப்பதாகவும் எமது மக்கள் விடுதலை அடையும் வரை எவரும் அரசாங்கத்தின் பக்கம் தாவப் போவதில்லை என்றார் அவர். (அ–5)

தவறை சரிப்படுத்திக் கொள்ள பிரயாசைப்படுவதால் அவமானம் கிடையாது.

-ராஜாஜி

வலம்புரி

# ஆசிரியர்களைக் குழப்பும் 'அதிபர்' நேர்முகப்பரீட்சை

அதிபர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் நடந்துள்ளது,நடந்து வருகின்றது.

அதிபர் தரம் 2; II க்கான நேர்முகத்தேர்வு வட பகுதி உட்பட நாடு பூராகவும் நடந்து முடிந்துள்ளது.

அதேநேரம் அதிபர் தரம் மூன்றுக்கான நேர்முகத்தேர்வு,வட பகுதியில் நடந்துகொண்டிருக்கின்றது.

இந் நிலையில் அதிபர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகளை உடனடியாக இடைநிறுத்துமாறு கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் கல்வி அமைச்சரின் அறிவித்தல் வட மாகாண கல்வி அமைச்சின் செயலருக்கு இதுவரை கிடைக்கப்பெறாத காரணத்தினால்,வட பகுதியில் தொடர்ந்தும் அதிபர் தரம் மூன்றுக்கான நேர்முகத்தேர்வை நடத்துவதென முடிபெடுக்கப்பட்டுள்ளது.

எதுவாயினும் கல்வி அமைச்சின் தெளிவற்ற நடைமுறைக் காரணமாக ஆசிரியரிடையே குழப்பமும்-பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

அதாவது, அதிபர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றிய சகல ஆசிரியர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்ற கதை ஒருபுறமும்,

இதைவிட அதிபர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றாதவர்கள் கூட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள் என்ற கருத்துக்கள் தென் பகுதியில் பரவலாகப் பேசப்படுகின்றது.

இதற்கு மேலாக இன்னோர் சாரார்,போட்டிப் பரீட்சைக்கான விடைத்தாள் இதுவரை திருத்தப்படவில்லையெனவும், ஒரு பகுதி விடைத்தாளை பரீட்சைத் திணைக்களம் தொலைத்து விட்டது என்றும் கூடப் பேசுகிறார்கள்.

இதில் எது உண்மை என்ற ஆய்வுகளுக்கு அப்பால், இலங்கை ஆசிரியர் சங்கம் அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையை எதிர்த்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு செய்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இடம்பெற வேண்டிய அதிபர் பதவிக்கான ஆட்சேர்ப்பில் மாகாணங்களின் செல்வாக்கு மேலோங்கியிருப்பதாகவும்,போட்டிப் பரீட்சைக்கான புள்ளிகளை வெளியிடாமல் நேர்முகத்தேர்வு நடத்தப்படுவதாகவும் இது ஆட்சேர்ப்பிற்கான பொதுக்கொள்கைக்கு முரணானது எனவும் கூறி இலங்கை ஆசிரியர் சங்கம் தனது மனுவை மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே அதிபர் பதவிக்கான நேர்முகப்பரீட்சையை இடைநிறுத்துமாறு கல்வி அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொறுப்பு வாய்ந்த அதிபர் பதவியை பொறுப்புடன் தெரிவு செய்யவேண்டும். அப்போதுதான் அதிபர் பதவிக்கு தெரிவு செய்யப்படுவோர் தமது பாடசாலை முகாமைத்துவத்தை செம்மையாக மேற்கொள்ள முடியும்.

தெரிவு தவறானதாக அமைகிறபோது அங்கு ஊழல்கள்-மோசடிகள் இடம் பெற்று விட்டதான குற்றச்சாட்டுக்கள் எழும். இவை அவ்வளவு ஆரோக்கியமானது அல்ல.

எனவே அதிபர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளவர்களின் எதிர்பார்ப்புக்கு விளக்கம் கொடுக்கும் வகையில் கல்வி அமைச்சர் தமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தவேண்டும்.

இதைவிடுத்து வெற்றிடம் நிரப்பலை கிடப்பில் போட்டால் அது ஆசிரியர்களின் சேவை கிடைப்பனவில் எதிர்க்கணியப் பெறுமானத்தை சுட்டி நிற்கும்.

# மகிந்த-புலிகள் தேர்தல் உடன்பாடு விபரிக்கிறது சண்டே லீடர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்டதாக கூறப்படும் உடன்பாடு என்ன என்பது குறித்து கொழும்பு வார ஏடான சண்டே லீடர் தகவல் வெளியிட்டுள்ளது.அதன் விபரம் வருமாறு;

இந்த உடன்பாட்டின் போது போலியான வீடமைப்பு என்ற திட்டத்தின் அடிப்படையில் பல மில்லியன் ரூபாய்கள் விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது: மாவிலாறு பகுதியில் 15 ஆயிரம் சிங்களவர்கள் நீரின்றி நெருக்கடிகளுக்கு உள்ளான போதும்,பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்கள் மூதூரில் இடம் பெயர்ந்த போதும் கடும் மோதல்களில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பலியான போதும், போலியான இத் திட்டம் வன்னிப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி மகிந்தவினால் நாடாளுமன்றத்தில் இதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் பெருமளவான பணம் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு-கிழக்கில் உள்ள மக்களை வாக்களிக்க விடாது தடுப்பதற்காக மகிந்த மேற்கொண்ட இந்த நடவடிக்கை இரு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதியில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதியான எமில் காந்தனுக்கு பெருமளவான பணத்தை ஜனாதிபதியின் ஆலோசகரான பசில் ராஜபக்ஷ வழங்கியிருந்தார்.அந்த பணத்தில் அமெரிக்க டொலர்களும் இருந்தன.

இரண்டாவது பகுதி மகிந்தவின் வெற்றியுடன் நடைமுறைக்கு வந்தது. அதில் விடுதலைப்புலிகளின் பகுதியில் வீடமைப்பு திட்டம்,கருணா குழுவின் ஆயுதங்களை களைதல், பல்வேறு பகுதிகளில் உள்ள அரசியல் அலுவலகங்களுக்கு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை நியமித்தல், தாய்லாந்தில் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்தல் என்பன அடங்கும்.

மகிந்தவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் இந்த திட்டம் தேசிய ஜெயலங்கா வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஆவணப்படுத்தப்பட்டிருந்தது.

இதில் 400 வீடுகளை அமைக்கும் பணி 437ஏ மூன்றாவது வீதி,திருநாவுகுளம், தாண்டிக்குளம்,வவுனியா என்னும் முகவரியில் உள்ள ஹெறல்டிங் பிறைவேட் நிறுவனத்திற்கும்,மட்டக்களப்பில் 400 வீடுகளை நிர்மாணிக்கும் பணி 113-1 மில் வீதி, உயிலங்குளம்,வவுனியா என்னும் முகவரியில் உள்ள எவரெஸ்ட் சிவில் எஞ்சினியரிங் சேர்விஸ் என்னும் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் 400 வீடுகளை நிர்மானிக்கும் பணிகளும் அதில் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அது எந்த மாவட்டத்தில் என குறிப்பிடப்படவில்லை. மொத்தமாக ஆயிரத்து 200வீடுகளுக்குமான மொத்த செலவீடு 757,166,000ரூபாய்கள் ஆகும். இந்த நாடகத்தின் முக்கிய பிரதிநிதிகள் எமில் காந்தன் மற்றும் நீதித்துறை திணைக்களத்தைச் சேர்ந்த ஒருவர், பயங்கரவாத விசாரணை பிரிவைச் சேர்ந்த ஒருவர் ஆகியோராவார்கள்.

முன்னாள் விமான நிலைய தலைவரே காந்தனுக்கு நிதியை வழங்கியதாக அரசு குற்றம் சுமத்தி கைது செய்திருந்தது. ஆனால் மகிந்தவே காந்தனின் முன்னணி நிறுவனத்திற்கு பணத்தை வீடமைப்பு திட்டத்தின் அடிப்படையில் வழங்கியிருந்தார். வவுனியாவில் உள்ள ஜீஎஸ் கட்டட நிர்மாண நிறுவனம் காந்தனுடன் தொடர்புள்ள நிறுவனம் என உயர் வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

எமில் காந்தனுக்கு வழங்கப்பட்ட திட்டத்தை அங்கீகரிக்குமாறு மீள் கட்டுமான அபிவிருத்தி சபைக்கு மகிந்த உத்தரவுகளையும் வழங்கியிருந்தார். இந்த திட்டமானது விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பர்கவி சாந்திகுமாருக்கு வழங்கப்பட்டிருந்தது.

மேலும் எமில் காந்தன்,பர்கவியின் இரு சகோதரர்களான சாந்திக்குமார் கிசோகுமார்,சாந்திக்குமார் கஜன்குமார் ஆகியோரும் இணைக்கப்பட்டிருந்தனர். மகிந்த பதவியேற்ற ஒரு மாதத்தின் பின்னர் வீடமைப்புத் திட்டம் 437 ஏ,மூன்றாவது வீதி திருநாவுகுளம், தாண்டிக்குளம்,வவுனியா என்னும் முகவரியில் உள்ள பி.அன்ட் கே ஹொல்டின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த போலியான நிறுவனத்திற்கு 700 மில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு மகிந்த கையொப்பமிட்டிருந்தார்.இந்த நிறுவனமானது டிசம்பர் 23 ஆம் திகதி 2005 ஆம் ஆண்டு கொழும்பிலே நிறுவப்பட்டிருந்தது. வவுனியாவில் இது இல்லை. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் 45-4 சேர்ச் வீதி வத்தளை என்னும் முகவரியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் சேர்ச் வீதி வத்தளையில் நிறுவன்ங்கள் எதுவுமே இல்லை. எமில் காந்தனின் நிறுவனத்தின் பங்குதாரரான அவரது உறவினர் கொடுத்த முகவரியான 48 ஏ அல்பேட் பிளேஸ் தெகிவளைப் பகுதியில் கைவிடப்பட்ட ஒரு வீடே அது.

மேலும் 113-1மில் வீதி உயிலங்குளம், வவுனியா என்னும் முகவரியிலும் எந்த நிறுவனங்களும் இல்லை. அதில் உள்ள வீட்டில் பி.நந்தகுமாரும் அவரது மனைவியுமே வசித்து வருகின்றனர். 437 ஏ 3 ஆவது வீதி திருநாவுக்குளம், தாண்டிக்குளம், வவுனியா என்னும் முகவரியிலும் ஒரு வீடு உள்ளது.

அதில் வன்னியசிங்கம் சுப்பிரமணியம் என்பவர் வசித்து வருகிறார். அந்தப் பகுதிகளில் 700 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான வீடுகளை நிர்மாணிப்பதற்குரிய நிறுவனங்கள் எதுவும் இல்லை என் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதனுடன் மகிந்தவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணமும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.(ந-5)

# சந்திரிகாவின் வருகையை அடுத்து மாத இறுதியில் கட்சித் தாவல்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் இவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் பதவிகள் குறித்து தீர்க்கமான முடிவுகளை இரு தரப்பும் ஏற்றுக்கொண்டதும் இவர்களது கட்சி மாறும்பணி இடம் பெறும் என்றும் இரு தரப்பினருக்குமிடையே பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வரும் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆளும் தரப்பிலிருந்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஐவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவில் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாத இறுதியில் லண்டனில் இருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கை வரவுள்ளார். அவரின் வருகையின் பின்னர் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஐவர்,சிறிலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களில் அதிகமானவர்கள் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் அவருடன் நெருக்கமாக செயற்பட்டவர்கள் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க இம் மாத இறுதியில் இலங்கை வர இருப்பதாக அவரது செயலக செயலாளர் பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். லண்டனில் தற்போது தங்கியுள்ள சந்திரிகா இலங்கை வந்ததும் இலங்கையில் சுமார் இரண்டு மாத காலம் தங்கியிருப்பார்.

இவ்வாறு தங்கியிருக்கும் கால கட்டத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் தனது மகளான யசோதரா குமாரதுங்காவின் திருமணத்தையொட்டி உறவினர், நண்பர்களுக்கான விருந்துபசாரம் ஒன்றை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனால் நடத்தப்பட்டு வரும் Clinton Global Intitiative என்ற வறுமை ஒழிப்புச் சபையின் ஆலோசனைக்குழுவின் உறுப்பினராக இணைந்து செயற்படுமாறு கிளின்டனால் விடுக்கப்பட்ட அழைப்பை இவர் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவரது செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை எஸ்.பி.திஸாநாயக்க அரசாங்கத்தில் இணைப்போவதாக வதந்திகள் பரவியபோதும் அவர் அதனை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# மூன்று விடயங்களால் தீர்வுத்திட்டத்தில் இழுபறி சர்வகட்சி மாநாட்டில் கடும் வாதப்பிரதிவாதம்

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டில் மூன்று பிரதான விடயங்கள் குறித்து இணக்கப்பாடு காணப்படாததால் இறுதியான அரசியல் தீர்வுத்திட்டத்தை தயாரிப்பதில் கால தாமதம் ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்சி முறை,அதிகாரப் பகிர்வு, அரச தலைமைத்துவம் போன்ற மூன்று விடயங்கள் குறித்தே சர்வகட்சி மாநாட்டில் இதுவரை இணக்கப்பாடு காணப்படவில்லையென தெரிய வருகிறது.

கடந்த வாரம் இடம் பெற்ற சர்வகட்சி மாநாட்டிலேயே இந்த விடயங்கள் குறித்து கடுமையான வாக்குவாதங்கள் இடம் பெற்றதாகவும் தெரியவருகிறது. ஆட்சி முறையானது ஒற்றையாட்சியா? அல்லது சமஷ்டியா? மற்றும் அதிகாரப் பகிர்வை பிரதேச சபை,வலய சபை,மாவட்ட சபை,மாகாண சபை ஆகியவற்றில் எதனூடாக மேற்கொள்வது?

அரசு தலைமைத்துவதை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியா? அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமரா? கவனிப்பது போன்ற விடயங்கள் குறித்து சர்வகட்சி மாநாட்டில் தீர்வுகாண முற்பட்டபோது அம் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே இறுதித்தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதில் கால தாமதம் ஏற்படுவதால் இது மேலும் இரண்டு மாதங்களேனும் தாமதமடையலாம் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. எனினும் சர்வகட்சி மாநாட்டு தீர்விற்கான ஆவணங்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் இரு வாரத்திற்குள் தயாரிக்கமுடியும் என சர்வகட்சி குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# பொருளாதார நோக்கத்துடன் அனுசரணையாளராக நோர்வே ஈடுபடவில்லை; தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்

இலங்கையில் பொருளாதார நோக்கத்துடன் அனுசரணையாளர்களாக ஈடுபடவில்லை என்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசியதாவது, அனைத்துலகத்தின் அமைதி மற்றும் அபிவிருத்திப் பணிகளில் நோர்வே பல ஆண்டு காலமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அந்தப் பணியானது எமது நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையில் ஒருங்கிணைந்த ஒன்றாகும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்ததற்கமைய நாம் இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணையாளர்களாக ஈடுபட்டோம். மகிந்த ராஜபக்ஷவினாலும் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இத்தகைய வேண்டுகோள்களுக்கமைய இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எம்மலான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றோம்.

எமது அனுசரணையாளர் பணியை எதிர்த்து கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தின் முன்பாக எமது நாட்டின் கொடிகளும் உருவப் பொம்மைகளும் எரிக்கப்பட்டன. எமது பணிக்காக நாம் கொடுத்திருக்கும் ஒரு சிறிய விலை இது. ஐக்கிய இலங்கையில் அனைத்து இன மக்களும் அமைதியாக வாழ வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும். இந்த நாட்டில் எமக்கு என்று எதுவித பொருளாதார உத்தியோடு நாம் ஈடுபட வில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் விரும்பும் வரையில் இலங்கை அமைதி முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் ஈடுபடும் என்றார் பிரட்ஸ்கர். (ந-5)

# நிதியுதவி கேட்டு மிலிந்த அமெரிக்கா பயணம்

## நாடு திரும்பும் போது இந்தியாவுக்கும் செல்வார்

(கொழும்பு)

உல்லாசத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்காவுக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டார். உலக வங்கியின் தலைவரான றொபார்ட் பி.சொய்லிக் மற்றும் அமெரிக்காவின் அனைத்துலக அபிவிருத்திச் சபையான யு.எஸ்.எய்ட்டின் புதிய தலைவராக ஹெனிரித்த எச்.ஃபோரே ஆகியோரை மிலிந்த மொறகொட சந்திக்கவுள்ளார்.

உலக வங்கி மற்றும் அமெரிக்காவின் உதவி வழங்கும் சபையின் புதிய தலைவர்கள் இருவரும் தமக்கு நீண்ட நாள் நண்பர்கள் என்றும் அவர்களைச் சந்தித்து இலங்கையின் நிலைமைகளை விளக்கவுள்ளதாகவும் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அனைத்துலக நாடுகள் நிதியுதவி வழங்குவதை நிறுத்தியுள்ளன. இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவின் சார்பில் சிறப்புப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மிலிந்தவின் அமெரிக்கப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. மிலிந்தவின் அமெரிக்கப் பயணத்தை உன்னிப்பாக அவதானிப்பதாக இணைத் தலைமை நாடுகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனையும் மிலிந்த மொறகொட சந்திக்கவுள்ளார். அமெரிக்கப் பயணத்தை நிறைவு செய்து விட்டு இலங்கை செல்லும் வழியில் இந்தியாவுக்கும் பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனானால் அமைக்கப்பட்ட ஏழைகளுக்கான சட்டபூர்வ அதிகாரம் வழங்குவதற்கான உயர் நிலை ஆணையக் கூட்டத்திலும் மிலிந்த மொறகொட கலந்து கொள்கின்றார்.

இந்த ஆணையகத்தின் உறுப்பினராகப் பிரித்தானியப் பிரதமர் ஹோல்டன் பிறவுண் அங்கம் வகிக்கின்ற போதும் பிரித்தானியாவின் தற்போதைய சூழ்நிலைகளில் அவர் இக் கூட்டத்தில் கலந்து கொள்வது சந்தேகம் என்றும் கூறப்படுகின்றது. (ந-5)

## கட்டுநாயக்க...

கப்டன் அஜந்த டி சில்வா மறுத்துள்ளார். காயமடைந்த வான்படைப் பொறியியலாளர்கள் மூவரும் நீர்கொழும்பு ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் படுகாயமடைந்த நிலையில் இருந்த வான்படைப் பொறியியலாளர் ஒருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## பிரஸ்கரை வன்னிக்கு...

கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது, கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தல்களை இவ்வருட இறுதிக்குள் நடாத்தவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை நாங்கள் வரவேற்கின்றோம். அங்கு தேர்தல் நடாத்தப்பட்டு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களிலும் ஜே.வி.பி. போட்டியிடுவதற்கு எதிர்பார்க்கின்றது. நாங்கள் போட்டியிட்டு வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையுள்ளது என்றார். இதே வேளை விரைவில் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் வன்னி செல்லவுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன. இதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளதாகத் தெரிகின்றது. ஆனால் எக்காரணம் கொண்டும் நோர்வேத் தரப்பினரை வன்னிக்கு அனுப்பக் கூடாது என்று அரசை வலியுறுத்துகின்றோம் என்றார். (ந-5)

## திருகோணமலைக் கடற்பரப்...

கொல்லப்பட்டிருப்பதாகத் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத் தின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படையின் பாரிய டோறா அணி மீது விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் நேற்று அதிகாலை நடத்திய தாக்குதலில் மூன்று டோறாக்கள் கடுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளன என்று விடுதலைப்புலிகள் தரப்பு அறிவித்துள்ளது.

கிழக்குக் கடற்பரப்பில் கொக்குத்தொடுவாய் தொடக்கம் கொக்கிளாய் புல்மோட்டை வரையான பகுதியில் கடற்படையின் 21 டோறாப் பீரங்கிப் படகுகளைக் கொண்ட அணி மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பமான இத் தாக்குதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிவரை நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. மூன்று மணி நேரம் நடந்த தீவிர தாக்குதலில் கடற்படையின் மூன்று டோறாப் பீரங்கிப் படகுகள் கடும் சேதங்களுக்குள்ளாகின.

இத்தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கடற்படைக்கு ஆதரவாக கொக்குத்தொடுவாய்-கொக்கிளாய்-புல்மோட்டை பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் செறிவான ஆட்லறித் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை நட்த்தியுள்ளனர்.

கடற்புலிகள் நடத்திய தீவிர தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் கடற்படையினர் சேதமாகிய டோறாப் பீரங்கிப் படகுகள் மூன்றையும் கட்டி இழுத்துக் கொண்டு திருகோணமலைக்குச் சென்றதாகவும் இம் முறியடிப்புத் தாக்குதலில் கடற்புலிகள் இருவர் வீரச்சாவைத் தழுவியுள்ளதாக்வும் புலிகள் தரப்பு அறிவித்துள்ளது. (ந-5)

## சுய அதிகாரம் அளிக்கும்...

பொறுப்பை இலங்கை அரசு வைத்துக் கொள்ளலாம் என்றார்.

ஒரு வெடிகுண்டின் விலை 65 ஆயிரமாகவுள்ளது. ஆயுதங்களின் விலைகளும் வெகுவாக உயர்ந்துவிட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது அவர் என்னிடம் குறிப்பிட்டார்.

இவ்வாறு நாம் ஆயுதங்களுக்கு அதிகளவில் பணம் செலவழிப்புதால் நாட்டின் பணவீக்க விகிதம் கடுமையாக உயர்ந்துவிட்டது. இலங்கை பணவீக்க விகிதம் தற்போது 20.5 சதவீதமாகவுள்ளது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் 13.5 ஆக இருந்தது.

பண வீக்க விகிதத்தால் மாத வருவாயை நம்பி மக்களால் ஜீவனம் நடத்த முடியவில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது. நாட்டின் பாதுகாப்புத் துறைக்கு ஆண்டுக்கு 5500 கோடி நிதி ஒதுக்கப்படுகின்றது.

இதைத் தவிர இந்த ஆண்டுவிமானப் படையில் புதிய விமானங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த யுத்தத்தைத் தவிர்க்க வேண்டும். விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் பகுதிகளுக்கு சுய அதிகாரம் அளித்தால் இவை சாத்தியமாகும்.

1987 இல் இது போன்று மாகாண கவுன்ஸில் அமைக்கப்பட்டது. ஜனாதிபதியும் இது தொடர்பாக என்னிடத்தில் பேசியுள்ளார். அனைத்துக் கட்சிகளுடன் கலந்து பேசி விரைவில் நல்ல முடிபு மேற்கொள்ள அரசு தயாராகவுள்ளது என்றார். (ந-5)

## சமாதான முயற்சியில்...

ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் ஹலோல்ட் அன்ரனி ஆண்டகை , அநுராதபுரம் ஆயர் நோபேட் அன்றாடி ஆண்டகை ஆகியோருடன் பிரதான பௌத்த பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடத்தின் பிரதிநிதிகள் மற்றும் ராமநாய நிக்காய, அமரபுர நிக்காய ஆகிய பௌத்த பீடங்களின் பிரதிநிதிகளும் அடங்கிய மதக் குழுவினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இக் குழுவினர் முதற்கட்டமாக எதிர்வரும் சில தினங்களில் கிளிநொச்சிக்குச்சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் உயர் மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

ம்தப் பிரதிநிதிகளின் குழுவினரின் இம் முயற்சி தொடர்பாக குழுவின் பிரதிநிதியான மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை வலம்புரிக்குக் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் நடைபெற்று வரும் இனமோதல்களினால் மனித அவலநிலை தோன்றியுள்ளது. எனவே வலுத்துவரும் யுத்தத்தினால் நாடு பெரும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

எனவே மோதல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் மோதல்களைக் கைவிட்டுப் பேச்சுக்குத் திரும்புமாறு அழுத்தங்களை வழங்கவுள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

இம் முயற்சியை சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நோர்வேக்கு ஆதரவாக மேற்கொள்ளவுள்ளோம். இதில் தீவிரப் போக்குடைய ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. ஆகியோருடன் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களுக்கு சமாதான முன்னெடுப்புத் தொடர்பாக அழுத்தங்களை வழங்கவுள்ளோம்.

மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சர்வதேச சமூகத்தினருடன் சந்தித்து தடைப்பட்டுள்ள சமாதான முயற்சி குறித்து விவாதிக்கவுள்ளோம் எனவும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்தார்.

இம் மதக் குழுவினருடன் இந்து, இஸ்லாமிய சமயப் பிரதிநிதிகளும் இணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ந-5)

## இலங்கை - இந்திய அரசுகளின்...

இதன் முதற்கட்டமாக வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம கடந்த வாரம் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரைச் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் அடுத்த வாரமளவில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்து முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை தற்போது அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொடவும் தனது அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா செல்லவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மூன்று கட்டங்களாக இந்தியத் தரப்பின் உயர் மட்ட அதிகாரிகளை இலங்கைப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் இதன்போது இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் மகிந்த ராஜபக்ஷ கைச்சாத்திடவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என பலராலும் எதிர்வுகூறப்பட்டுள்ள அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளமையால் இந்திய அரசாங்கம் இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இலங்கை அரசாங்கத்துடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து இந்திய மத்திய அரசியலில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விளக்கமளித்து வருவதாகவும் இந்தியாவின் நலன்களைக் கருத்தில் கொண்டு இலங்கையுடன் மேற்கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை எதிர்க்க வேண்டாம் என அவர் தமிழ் அரசியல் கட்சிகளிடம் கோரி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையை மேற்கொண்டால்இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் சகல படை நடவடிக்கைகளுக்கும் தேவைப்படும் அனைத்து விதமான ஆயுத தளபாடங்கள் மற்றும் ஒத்துழைப்புக்களையும் இந்தியா வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கிழக்கில்...

இதனிடையே ஆளும் சுதந்திரக் கட்சியின் ஆண்டு மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அம் மாநாட்டில் கிழக்குத் தேர்தல்கள் தொடர்பான நிலைப்பாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிடுவார் என்று கூறப்படுகின்றது. (ந-5)

## மானிப்பாய்...

இ னங்காணப்பட்டது.

சந்தைக்குச் சென்ற ஆயுததாரிகள் குறித்த நபருடைய உறவினரொருவரை இலக்கு வைத்துச் சுடமுயன்றபோது அவர் தப்பி ஓடஇவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டு விட்டுத் தப்பிச் சென்றதாக விசார ணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய்ப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)


**பதவி வெற்றிடங்கள்**

❖ கணினிப் பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள், இரவுக் கடமை)

❖ ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள் (ஆண்கள்)

❖ ஓவ்செற் இயந்திர பயிலுநர்கள் (ஆண்கள்)

தகுதியுடையவர்கள் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி

**விசேட வகுப்புக்கள்**

கணக்கீடு

A/L 2008, 2009

மாணவர்களிற்கான விசேட வகுப்புக்கள்.

[உங்கள் இடங்களில் group classess அமைக்கப்படும்]

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

T.S.Bala

0779184121 (C-172)


... வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.